ConnectABILITY
A project of Community Living Toronto

# சேர்ந்தே கற்போம் படிப்படியாக செல்லும் வழி

டொரான்டோ நகரம்/ ஆரம்ப குழந்தைப்பருவ சேவைகள் குழு: டொரான்டோ சமூக வாழ்க்கை/ சர்ரே பிளேஸ் மையம்

*குறிப்புப் பக்கம்*

# உங்கள் குழந்தை எதற்காக மற்றும் எப்படி தொடர்பு கொள்கிறது என்பதை புரிந்துக்கொள்ளுதல்



*தகவல் பரிமாற்றம் என்பது வார்த்தைகள் என்பதை விட இருவருக்கு இடையே ஏற்படும் எண்ணங்களின் பரிமாற்றம் ஆகும். பேச்சு, சைகைகள், ஸ்பரிசம் மற்றும் முக பாவம் மூலமாக தொடர்புகொள்கிறோம். நல்ல தகவல் பரிமாற்றம் என்பது நாம் புரிந்துக்கொள்வது மற்றும் மற்றவர்களால் புரிந்துக்கொள்ளப்படுவது என்ற இரண்டையும் உள்ளடக்குவதாகும்.*

சிறப்புத் தேவைகளை கொண்ட குழந்தைகளின் தகவல் பரிமாற்றம் மற்றவர்களுக்கு புரிந்துக்கொள்ள கடினமான வழியில் அமையலாம். குழந்தை வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருக்கலாம். அதாவது பிஸ்கட் வேண்டும் என்று உங்களுக்குத் தெரியப் படுத்த அலமாரிக்கு அழைத்து சென்று காண்பிப்பது.

குழந்தை எப்படி, எந்தக் காரணத்துக்காக தொடர்பு கொள்ள விழைகிறது என்பதை புரிந்துக்கொள்வது அவளுடைய பலத்தை மேம்படுத்துவதையும் மற்ற வழிகளில் தொடர்பு கொள்வதையும் கற்றுக் கொடுக்கிறது.

## *எப்படி ஒரு குழந்தை தொடர்பு கொள்கிறது:*

சைககளை [சுட்டிக்காட்டுதல், அடைதல்], வார்த்தைகள் மற்றும் முகபாவங்கள் ஆகியவற்றைக் கொண்டு தகவல் பரிமாறிக்கொள்ளும் பல வழிகளை நாங்கள் ஏற்கனவே கூறியிருக்கிறோம். உங்கள் குழந்தை தொடர்பு கொள்ளக்கூடிய சில வழிகள் பின்வருமாறு:

- ஒன்றை பார்ப்பது. சென்றடைவது, ஒரு பொருளை, செயலை, நபரை அல்லது படத்தை சுட்டிக்காட்டுவது.
- ஒருவரை ஒரு பொருள் இருக்கும் இடத்துக்கு இழுத்து செல்வது.
- பொருளுக்கு அருகாமையில் செல்வது
- முகபாவம்
- கண்ணால் தொடர்பு கொள்வது
- ஒலி அல்லது செய்ககளை மற்றவர்களைப் போல செய்வது
- வார்த்தைகளைப் பயன்படுத்துவது
- கூச்சலிடுவது அல்லது காரணமில்லாமல் கோபப்படுவது
- விட்டு ஓடுவது, தாக்குவது அல்லது கடிப்பது போன்ற நடத்தைகளை வெளிப்படுத்துவது.
- கையினால் சைகை செய்வது [சைகை மொழி]

பல விஷயங்களுக்கு ஒரே மாதிரியானத் தொடர்பை வெளிப்படுத்தலாம். உதாரணமாக: உணர்ச்சி வசப்பட்டாலோ அல்லது சில உணவு வகையை உண்ண மறுத்தாலோ கூச்சலிடுவது போன்று.

## குழந்தை ஏன் தொடர்பு கொள்கிறது:

பல காரணங்களுக்காக நாம் ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொள்கிறோம். உங்கள் குழந்தை தொடர்பு கொள்வதற்கான சில காரணங்கள்:

- எதையோ ஒன்றை கேட்பதற்காகவோ அல்லது செய்வதற்காகவோ.
- சவுகரியத்தைக் கேட்பதற்காக.
- தகவலைக் கேட்பதற்கு.
- எதிர்ப்பை வெளிப்படுத்த [எது அவளுக்கு தேவை இல்லை என்பதை வெளிப்படுத்த]
- வரவேற்க.
- பிடித்த விஷயத்தை பரிமாரிக்கொள்ள.
- உணர்ச்சிகளை வெளிப்படுத்த.



## உங்கள் குழந்தைக்கு மொழியைப் புரியவைக்க உதவுவது

பார்த்தல், தொடுதல், கேட்டல், சுவைத்தல் மற்றும் நுகர்தல் ஆகியவற்றின் மூலமாகவே குழந்தை முதலில் கற்றுக்கொள்ளத் துவங்குகிறது. பொதுவாகவே, முதலில் வார்த்தை பேசத்துவங்கும் முன்பே பல வார்த்தைகளை புரிந்துக் கொண்டுவிடுகிறது. வார்த்தைகளை அதே சூழ்நிலையில் மறுபடியும் மறுபடியும் சொல்வதன் மூலம் அந்த புரிந்துணர்தலை வளர்க்க முடியும். ஒரு பொருளின் பெயரை வாயால் சொல்லத் துவங்கும் முன்பே, அந்தப் பொருளை நீங்கள் பெயர் கொண்டு சொன்னால் அதைக் கொண்டுவரும். உதாரணமாக "பால்" என்று சொன்னால் பாட்டிலைப் பார்ப்பாள். ஏனெனில் அந்த வார்த்தையுடன் தினசரி தொடர்பு கொண்டுள்ளாள். அந்த வார்த்தையைப் புரிந்துக்கொள்வதை எடுத்துக்காட்டுகிறது.

உங்கள் குழந்தை உங்களைப் புரிந்துக்கொள்ள இப்படி உதவலாம்:

- குழந்தையுடன் பேசும்போது நேருக்கு நேர் பார்த்து பேசுவது.
- வார்த்தைகளுடன் சைகைகள், பொருட்கள் அல்லது படங்களை பயன்படுத்தலாம் [உதாரணமாக: "உட்கார்" என்று சொல்லும்போது நாற்காலியை தட்டிக் காண்பிக்கவும்.]
- அவள் செய்யும் செயல்களை பெயரிட்டு அழைப்பது [உதாரணமாக: "ஜெஸிக்கா ஓவியம் வரைகிறாள்" என்று அவள் வரையும்போது சொல்வது.]
- தொடர்பான வார்த்தைகளை கொடுப்பது [உதாரணமாக: அடுக்கு விளையாட்டில் ஒரு கோபுரத்தை அமைக்கும் போது"மேலே, மேலே" என்று சொல்வது]
- மெதுவாகவும் தெளிவாகவும் சில பொதுவான வார்த்தைகளை பயன்படுத்தி பேசுவது. [உதாரணமாக: உருளைக்கிழங்கு தலை பொம்மையில் கண்ணை பொருத்தும் போது "கண் உள்ளே" என்று சொல்வது.]
- முக்கியமான வார்த்தைகளை வலியுறுத்தி சொல்வது. [உதாரணமாக" ஜூஸ் வேண்டும்"]
- சுற்றியிருப்பது என்ன என்பதை அவளுக்கு சொல்வது. [உதாரணமாக: வெளியே போகும் பேருந்தை பார்க்கும்போது "பேருந்து" என்று சொல்வது]

## உங்கள் குழந்தைக்கு தொடர்பு கொள்ள கற்றுத் தருவது

குழந்தை வார்த்தைகளை பயன்படுத்தத் துவங்கும்போது, நீங்கள் சொல்வது போன்றும் சொல்லலாம் அல்லது தானாகவே சொல்லாம். முதலில் உச்சரிப்பு தவறாக இருக்கலாம் [ஒரு சொல்லை சொல்லும் விதம்]. தொடர்பு கொள்வதற்கு நிறைய காலம் எடுக்கலாம் அதுவே குழந்தைக்கும் பெற்றோருக்கும் எரிச்சலூட்டுவதாக இருக்கலாம்.

குழந்தை தன் கருத்தை சொல்வதற்கு இப்படி உதவலாம்:`

- உங்களுக்கு பதில் அளிக்க அவகாசம் தருவதன் மூலம்–ஒரு முறை கேட்டு விட்டு காத்திருங்கள்.
- அவளுடைய வார்த்தைகள் மற்றும் செய்கைகளை அவளைப் போல சொல்வது அல்லது செய்வது.
- அவள் சொல்வதை விளக்கி சொல்வது [உதாரணமாக "கீழே விழுந்த ஒரு பொருளை காட்டி "ஓ! ஓ!" என்று சொன்னால், "கீழே விழுந்தது" என்று சொல்லவும்].
- ஒரு வரியின் கடைசி வார்த்தையை முடிக்காமல் அவளை முடிக்கச் சொல்லி ஊக்கப்படுத்துவது. [உதாரணமாக: பேருந்தி மீதுள்ள சக்கரங்கள்____________"].
- அவள் தொடர்பு கொண்டு சொல்வதற்கு பதில்

அளிப்பது-அவள் சொன்னதின் மீது கருத்தைச் சொல்லவும்.

- தேர்ந்தெடுக்க வாய்ப்பளிப்பது. [உதாரணமாக: "உனக்கு பால் வேண்டுமா அல்லது ஜூஸ் வேண்டுமா?"]
- அவள் சொல்வதுடன் சில வார்த்தைகளை சேர்த்துச் சொல்வது [ உதாரணமாக அவள் "நாய்" என்று சொன்னால் "பெரிய நாய்" என்று நீங்கள் சொல்லலாம்]